செ.வெ.எண்.87-2019 நாள்.31.08.2019

# விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப்பணித்துறை சார்பில் நடைபெற்று வரும் குடிமாரத்துப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

****

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப்பணித்துறை சார்பில் நடைபெற்று வரும் குடிமாரத்துப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.08.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழக அரசின் உத்தரவில் ரூ.499.688 கோடிக்கு தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டத்திற்குட்பட்ட 1829 ஏரிகளில் குடிமராமத்து பணிகளை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த குடிமராமத்து பணிகள் நீர்வள ஆதாரத்துறையினரால் திட்டமிடப்பட்டு விவசாய சங்கங்கள், ஆயக்கட்டுதாரர்கள், பயன்பாட்டாளர் சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் வரத்து வாய்க்கால் தூர்வாருதல், மதகுகள் சீரமைத்தல், கலுங்கல்கள் சீரமைத்தல், ஏரிக்கரையை பலப்படுத்துதல் மற்றும் அணைக்கட்டுகள் சீரமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் 6974.95 ஹெக்டேர் ஆயக்கட்டு நிலம் பாசன வசதி மேம்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்படி, இன்றைய தினம் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டம் ராமராஜபுரம் ஏரியில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல், கரையை பலப்படுத்துதல், மதகு புதுப்பித்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், பாசனவாய்க்கால் சீர்செய்தல் போன்ற குடிமராமத்துப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து காட்டுவன்னஞ்சூர் ஏரியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கரையை பலப்படுத்துதல், மதகு புதுப்பித்தல், பாசன வாய்க்கால் சீர்செய்தல், வரத்து வாய்க்காலை தூர்வாருதல் போன்ற குடிமராமத்துப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்னர் சங்கராபுரம் ஏரியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கரையை பலப்படுத்துதல், மதகு புதுப்பித்தல், பாசன வாய்க்கால் சீர்செய்தல், வரத்து வாய்க்காலை தூர்வாருதல் போன்ற குடிமராமத்துப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை கண்டறிந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏரியின் பரப்பளவை முழுவதும் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். ஏரியில் உள்ள சீமைக்கருவேல மரங்களை உடனடியாக அகற்றிட வேண்டும். நீர்நிலை புறம்போக்குகளில் வசிப்பவர்களுக்கு வேறு இடம்

வழங்கி பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

குடிமராமத்துப் பணிகளை மழைக்காலத்திற்கு முன்பாக விரைந்து முடிக்க வேண்டுமென பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் பாசனதாரர்கள் அரசு அலுவலர்களுடன் இணைந்து இப்பணிகளில் முழுவதுமாக ஈடுபடுத்தப்பட்டு இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு வெள்ளாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் திரு.இரா.மணிமோகன், சங்கராபுரம் வட்டாட்சியர் திரு.வாசுதேவன், உதவி செயற்பொறியாளர் திரு.முருகவேல், உதவி பொறியாளர் திரு.நாராயணன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.